Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, MARCH 7, 2024

வியாழக்கிழமை மார்ச் 07, 2024 | ஒளி: 09 கதிர் 207 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# “பாதை வெற்றி உறுதியாகிறது”



- பலன்களை பெற்றுக்கொடுப்போம்
- ஒருபோதும் பொய் சொல்லவில்லை
- இன்று நிம்மதியாக மூச்சுவிடுகிறது
- அறிவியல் முறையில் முன்னெடுப்பு
- அரசியல் வாதிகள் கனவு காண்கின்றனர்

அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களின் பலனாக நாட்டின் பொருளாதாரம் வலுவடைந்திருப்பதாகவும், எதிர்காலத்தில்மக்களுக்குமேலும் பல நிவாரணங்களைப் பெற்றுகொடுக்க எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அந்த செயற்பாடுகள் அனைத்தும் அறிவியல் முறைமைகளுக்கு அமைய, படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அதிகாரத்திற்காக ஒரு போதும் தான் பொய் சொல்லவில்லை என்பதோடு, அதிகாரத்திற்காக அன்றி நாட்டை மீளக்கட்டியெழுப்புவதே தனது நோக்கம் எனவும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## தங்க எம்.பிக்கு தடை



தங்கம் மற்றும் அலைபேசிகளை சட்டவிரோதமாக நாட்டிற்குள் கொண்டு வந்த குற்றச்சாட்டுக்குள்ளான தேசிய முஸ்லிம் கூட்டணியின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான அலி சப்ரி ரஹீமின் பாராளுமன்ற பதவி புதன்கிழமை (6ஆம் திகதி) முதல் ஒரு மாத காலத்திற்கு இடை நிறுத்தப்பட்டுள்ளது இராஜதந்திர வெளிநாட்டு கடவுச்சீட்டு மற்றும் பாராளுமன்ற சிறப்புரிமையைத் துஷ்பிரயோகம் செய்து 7 கோடி ரூபாய் பெறுமதியான தங்கம் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளை கட்டுநாயக்க விமான நிலையத்தில் விசேட பிரமுகர்கள் நுழைவாயிலின் ஊடாக சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டு வருவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளில் அவர் குற்றவாளியாகக் காணப்பட்ட நிலையில் புதன்கிழமை (06) முதல் ஒரு மாதத்திற்கான அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவி இடை நிறுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## நானா? நீங்களா?

### ஹர்ஷ கேள்விக்கு ஜனாதிபதி பதிலடி



நான் எவ்வளவு காலம் ஜனாதிபதியாக இருக்கப் போகின்றேன் என்பதற்கு முன்னர் நீங்கள் இன்னும் எவ்வளவு காலத்திற்குத் தலைவராக இருக்கப் போகின்றீர்கள் என்பது பிரச்சினையானது என்று அரசாங்க நிதிபற்றிய குழுவின் தலைவரான எதிர்க்கட்சி உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சிலவாவைப் பார்த்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## நடுத்தர மக்களை சுரண்டி பிழைக்கிறார்கள்



வரி உள்ளடங்களாக 92 ரூபாவுக்கு இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம் ஒரு கிலோ கிராம் சந்தையில் 365 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. 110 ரூபாய்க்கு இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு 203 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. சில்லறை , மொத்த வியாபாரிகள் நடுத்தர மக்களைச் சுரண்டி பிழைக்கிறார்கள். நுகர்வோர் அதிகார சபை என்ன செய்கிறது என்பது தெரியவில்லை. நுகர்வோர் அதிகார சபைக்கும்,சந்தைக்கும் இடையில் தொடர்பற்ற நிலையே உள்ளது என எதிர்க்கட்சி எம்.பியான பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றம் சாட்டினார்.

தொடர்ச்சி P2

## “நாட்டை சீரழித்தவர்களை பாதுகாக்கும் ஜனாதிபதி”



நாட்டை சீரழித்தவர்களை பாதுகாக்கும் செயற்பாடுகளிலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஈடுபடுகின்றார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பெப்ரவரி 20ஆம் திகதி இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, ஒத்திவைக்கப்பட்ட பிணைப் பொறுப்பாளிக்கப்பட்ட கொடுக்கல், வாங்கல்கள் சட்டமூலம், நம்பிக்கைப் பொறுப்பு பற்றுச் சீட்டுக்கள் (திருத்தச்) சட்டமூலம், ஈட்டுச்சட்டம் (திருத்தச்) சட்டமூலம், நிதி குத்தகைக்கு விடுதல் (திருத்தச்) சட்டமூலம், உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்புத் (திருத்தச்) சட்டமூலம், கம்பனிகள் (திருத்தச்) சட்டமூலம், ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டம் (திருத்தச்) சட்டமூலம் ஆகியன மீதான மூன்றாம் நாள் விவாதம் புதன்கிழமை(06) பாராளுமன்றத்தில் நடைபெற்ற போது அதில் உரையாற்றுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## “95 சதவீத இலாபத்தை பாவனையாளர்களுக்கு வழங்க வேண்டும்”



இந்த ஆண்டு ஜனவரி மற்றும் பெப்ரவரி காலப்பகுதிகளில் கிட்டத்தட்ட 35 பில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளது. அப்படியாயின் இலங்கை மின்சாரபை பெற்றுக்கொண்டுள்ள சுமார் 95 சதவீத இலாபத்தை பாவனையாளர்களுக்கு வழங்க வேண்டும். அதனை நேரடியாக மின்கட்டண குறைப்பின் ஊடாகவே வழங்க முடியும் என பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

21.9 சதவீத மின்கட்டண குறைப்புக்கு இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளமை தொடர்பில் புதன்கிழமை (06) கொழும்பிலுள்ள அவரது பிரத்தியேக அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பொதுமக்களின் நலன்கருதி 21.9 சதவீதத்தால் மின்சார கட்டணத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது.

தொடர்ச்சி P2

## ‘வற்’ நீக்கம்

புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், மருந்து மற்றும் சுகாதார உபகரணங்கள் போன்ற பொருட்கள், பெறுமதி சேர் வரி (வற்) பட்டியலில் இருந்து நீக்கப்படும் என்று பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) உரையாற்றும்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.



## காற்று மாசு அதிகரிப்பு


கடந்த 24 மணி நேரத்தில் காற்றின் நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதனால் கொழும்பு மாவட்டத்தில் அதிகூடிய காற்று மாசு சுட்டெண் 114 ஆக பதிவாகியுள்ளது.

தொடர்ச்சி P2

### மத்திய வங்கி ஊழியர்களின்

## சம்பள அதிகரிப்பால் சபையில் சர்ச்சை



மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு விவகாரம் தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பிரதமரிடம் எழுப்பிய கேள்விகளால் சபையில் புதன்கிழமை (06) சர்ச்சை ஏற்பட்டது.

எதிர்க்கட்சியினர் அதிருப்தியை வெளியிட்டு கருத்துக்களை முன்வைத்த போது, ஆளும் கட்சி உறுப்பினர்கள் அடிக்கடி குறுக்கீடுகளை செய்ததால் சர்ச்சை ஏற்பட்டது.

மத்திய வங்கி பணியாளர்களின் சம்பள அதிகரிப்பு விவகாரம் தொடர்பில் மத்திய வங்கியின் ஆளுநர் உட்பட அதிகாரிகள் கட்சித் தலைவர் கூட்டத்துக்கு அழைக்கப்பட்ட போதும், அங்கு எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்றே எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டினர்.

தொடர்ச்சி P2

### சிறுமி பாலியல் வன்கொடுமை

## குற்றவாளிக்கு 12 வருட கடூழிய சிறை

பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட நபர் ஒருவருக்கு 12 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து நுவரெலியா மாவட்ட மேல் நீதிமன்ற நீதவான் விராஜ் வீரசூரிய தீர்ப்பு வழங்கியுள்ளார்.

நோட்டன்பிரிஜ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளவட்டன் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய இராஜரட்ணம் கேதீஸ்வரன் என்பவருக்கே இந்த கடூழிய சிறை தண்டனை செவ்வாய்க்கிழமை (05) வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2010 ஆண்டு ஜனவரி மாத காலப்பகுதியில் கிளவட்டன் பகுதி பாடசாலை ஒன்றில் பகுதிநேர ஆசிரியராக கடமையாற்றிய இராஜரட்ணம் கேதீஸ்வரன் என்பவர் தரம் ஐந்தில் கல்வி கற்று வந்த சிறுமியான பாடசாலை மாணவியை பாலியல் வன்கொடுமை செய்துள்ளதாக அவர் மீது நுவரெலியா மேல் நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2




## ‘மெட்டா’ வுக்கு 100 மில்லியன் டொலர் நட்டம்

ஃபேஸ்புக், மெசஞ்சர், இன்ஸ்டாகிராம் சமூக ஊடகங்கள் திடீரென முடக்கப்பட்டதால், சமூக வலைத்தளங்களுக்குச் சொந்தமான மார்க் ஜுக்கர்பெர்க்கின் ‘மெட்டா’ நிறுவனம் 100 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை இழந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

## முருகன், ரொபட் ஆகியோரை உயிருடன் விடுதலை செய்க

### தமிழக முதல்வர் மறறும் இந்தியப் பிரதமர் மோடியிடம் ஸ்ரீதரன் கோரிக்கை



இந்தியச் சிறையில் இருக்கின்ற முருகன், ரொபட் பயஸ் உள்ளிட்டவர்களையாவது உயிருடன் விடுதலை செய்து அவர்களுடைய குடும்பத்தோடு அவர்கள் சேர நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர், இந்தியப் பிரதமர் மற்றும் இலங்கை அரசிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பியான சிவஞானம் ஸ்ரீதரன் வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) இடம்பெற்ற வரித்திருந்த சட்டமூல திருத்தங்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

இன்றைய நாள் 16 வருடங்களுக்கு முதல் எங்களுடைய மண்ணிலே மாமனிதர் கிட்டினன் சிவனேசன் இலங்கையினுடைய படையினரால் ஆழ ஊடுருவும் படை என்ற பெயரில் மிக மறைமுக கொலை செய்யப்பட்டிருந்தார் இந்த பாராளுமன்றத்தினுடைய உறுப்பினராக இருந்த சிவனேசன் அநியாயமாகக் கொல்லப்பட்டார்.

இதேவேளை, இந்தியாவிலேயே சிறையில் அடைக்கப்பட்டு பின்னர் விடுதலை ஆகியும் கூட வீடு வர முடியாமல் சில நாட்களுக்கு முதல் மரணத்தைத் தழுவிக்கொண்ட சாந்தனுக்கும் நான் இந்த இடத்திலே எங்களுடைய அஞ்சலிகளைச் செய்து கொள்கிறேன். தன்னுடைய தாயைப் பார்க்க, உறவினர்களைப் பார்க்க தன்னுடைய ஊரைப் பார்க்கத் துடியாய் துடித்த 20 வயதில் புறப்பட்ட இளைஞன் 53 வயதைக் கடந்து சடலமாக வரவேண்டிய மிகப்பெரிய நெருக்கடியும் ஒரு மன உளைச்சலும் இந்த மண்ணிலே ஏற்பட்டிருப்பது மிகப்பெரிய ஆதங்கம்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# "பாதை வெற்றி உறுதியாகிறது"

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க புதன்கிழமை (06) பாராளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரையிலேயே இவ்வாறு கூறினார்.

சில அரசியல் குழுக்கள் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் யதார்த்தத்தை மறந்து விட்டு, கற்பனைக்கதை சொல்கிறார்கள் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இன்று நாட்டின் முன்பிருக்கும் பிரச்சனைகளுக்கு, சில்லறைத் தனமான தீர்வுகள் இல்லை என்றும், அவ்வாறான தீர்வுகளால் நாட்டின் பொருளாதாரத்தை மீளமைக்க முடியாதென்பதை அடிப்படை பொருளாதார அறிவுள்ளவர்கள் அறிவர் எனவும் தெரிவித்தார்.

அரசாங்கம் பயணிக்கும் பாதையின் வெற்றி உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும், அந்த பாதையில் முன்னேறிச் செல்வதற்கான சட்டத் திட்டங்களைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்த்திருப்பதாகவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பொருளாதார மறுசீரமைப்புச்சட்ட மூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாகவும் கூறினார்.

போகும் பாதையில் முன்னேறிச் சென்று பொருளாதாரம் வலுவடைவதன் பலனை, நாடு என்ற வகையில் அடைந்து கொள்வதா? இல்லாவிடின் அந்த செயன்முறையிலிருந்து விடுபட்டு ஓரிரு வருடங்களுக்கு முன்பிருந்த இருள் யுகத்துக்குள் மீண்டும் செல்வதா? என்பதைத் தீர்மானிக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரையில்,

இன்று நமது நாடு ஓரளவு பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைந்துள்ளது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்கிறார்கள். எனினும், இதனை ஏற்றுக் கொண்டதாகக் காட்டிக்கொள்ளாமல், நாம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டத்தை விமர்சிப்பவர்களும் இருக்கின்றனர்.

பொருளாதாரம் வலுவாக இருப்பதாகத் தோன்றினாலும், மக்கள் அதை உணரவில்லை என்று சிலர் குற்றம் சாட்டுகின்றனர். மக்கள் மீது தேவையற்றவகையில் வரிச்சுமையை அதிகரித்துள்ளதாகவும் கூறுகின்றனர். மின்சாரக் கட்டணம் மற்றும் எரிபொருள் விலைகள் தேவையற்ற வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் கூறுகின்றனர் என தெரிவித்தார்.

# தங்க எம்.பிக்கு தடை

தங்கம் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் உடன் அவர் 2023 மே மாதம் 23ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார். அவருக்குத் தண்டப்பணம் விதிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட நிலையில் அவரை பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியிருந்தன.

இந்த நிலையில் இந்த சம்பவம் தொடர்பான விசாரணைக்காக நியமிக்கப்பட்ட சிறப்புரிமை குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்சவினால் ஜனவரி 24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கையில் வழங்கப்பட்டிருந்த பரிந்துரைக்கு அமைய அவருக்கு ஒரு மாத கால பதவி தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் மேற்படி தடைக்கான யோசனையை முன்வைத்த சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேற்படி சிறப்புரிமை குழுவின் அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைக்கு இணங்கவே அந்த யோசனையைச் சமர்ப்பிப்பதாகச் சபையில் தெரிவித்தார்.

# நானா? நீங்களா?

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) ஹர்ஷ டி சில்வாவினால் ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

ஹர்ஷ டி சில்வா அதன்போது கேள்வியெழுப்பித் தெரிவிக்கையில், நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியிடம் சில கேள்விகளை எழுப்புகின்றேன். அதாவது சர்வதேச கடன் மறுசீரமைப்பு தொடர்பான பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. சில மாதங்களே தேர்தலுக்கு உள்ளது. அடுத்து வரும் அரசாங்கம் இவ்வேலைத்திட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல காத்திருக்கின்றது. இதனால் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளுடனும் இணைந்து இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வது சிறந்தது என்று கருதுகின்றேன். நீங்கள் இன்னும் எவ்வளவு காலம் இருப்பீர்கள் என்று எங்களுக்குச் சரியாகத் தெரியாது.

நாங்கள் சஜித் பிரேதாச தலைமயில் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல எதிர்பார்த்துள்ளோம். இது தொடர்பில் கேள்வியெழுப்ப விரும்புகின்றேன் என்றார். அதன்போது பதிலளித்த ஜனாதிபதி ரணில், நான் எவ்வளவு காலம் இருக்கப் போகின்றேன் என்பதற்கு முன்னர் நீங்கள் தலைவராக எவ்வளவு காலம் இருக்கப் போகின்றீர்கள் என்பதுதான் பிரச்சினை. சம்பிக்க ரணவக்கவும் போய்விட்டார் என தெரிவித்தார். இதேவேளை சர்வதேச நாணய நிதியத்தினருடன் நான் ஆரம்பக்கட்ட பேச்சை நடத்திய பின்னர் கட்சித் தலைவர்களை அழைப்பேன். பேச்சுவார்தைகள் முடிவடைந்த பின்னர் அவற்றை உள்ளடக்கிய சட்ட வரைபை நான் பாராளுமன்றத்தில் முன்வைப்பேன் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

# "நாட்டை சீரழித்தவர்களை...

அதன்போது அவர் மேலும் கூறுகையில், ஜனாதிபதி உரையாற்றும்போது, நரகம் தொடர்பிலும் தொங்கு பாலம் தொடர்பிலும் குறிப்பிட்டார். ஆனால், நரகத்தின் நிறுவனர்களை நீங்கள்தானே பாதுகாக்கின்றீர்கள். இந்த நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு சென்றவர்களிடமிருந்து நாட்டு மக்கள் நஷ்டஈட்டை பெறுவதைத் தடுத்தது நீங்கள்தானே. நாட்டின் சொத்துக்களைக் கிடைக்கச் செய்யாது இருப்பவரும் நீங்கள்தானே. திருடர்களின் ஆணையில் பதவிக்கு வந்தவர் நீங்களே. நாட்டை சீரழித்த ராஜபக்ஷக்கள் அந்த தொங்குபாலத்தில் மேலே வர உதவுபவரும் நீங்களே. உங்களின் செயற்பாடுகளால் 220 இலட்சம் மக்கள் நிர்க்கதியாகியுள்ளனர். நீங்கள் இந்த நாட்டு மக்களுக்கு வழங்கும் தீர்வுதான் என்ன? என்று ஜனாதிபதியிடம் கேட்கின்றேன்.

இதேவேளை, தான் பெரிய தீ பிழம்புக்குள் பாய்ந்துள்ளதாகவே ஜனாதிபதி கூறியுள்ளார். ஆனால், அவர் உண்மையில் பாய்ந்தது தீ பிழம்புக்குள் அல்ல. திருடர்கள் கூட்டத்திற்குள்ளேயே ஆகும்.

மாதாந்தம் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்கின்றார். நிகழ்நிலைக் காப்புச் சட்டம், பயங்கரவாத எதிர்ப்பு சட்டங்கள் மூலம் ஒடுக்குமுறைகளைச் செய்ய முயற்சிக்கின்றார். சிம்மாசன உரையை மேற்கொள்ள ஆசையில் இருக்கின்றார்.

அரசியலமைப்பு பேரவையை நிறைவேற்றுத்துறையின் பொம்மையாக மாற்ற முயற்சிக்கின்றார். சபாநாயகருடன் இணைந்து அரசியலமைப்பைச் சீர்குலைக்கும் நடவடிக்கையிலும் ஈடுபடுகின்றார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் எந்த கருத்தும் இப்போது கூறுவதில்லை. தொங்கு பாலத்தில் ஏறி மேலே வந்தவர்கள் நாட்டை சீர்குலைத்த ராஜபக்ஷ குழுக்களே ஆகும்.

எவ்வாறாயினும் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வை ஐக்கிய மக்கள் சக்தி தயாரித்துள்ளது. பொருளாதார முன்னேற்றம் தொடர்பான வேலைத்திட்டத்தையே எதிர்பார்த்துள்ளோம். அனைவரையும் இணைத்த அனைவரும் நன்மையடையும் பொருளாதார வளர்ச்சியையே எதிர்பார்க்கின்றோம் என்றார்.

# "95 சதவீத இலாபத்தை பாவனையாளர்களுக்கு வழங்க வேண்டும்"

இருந்தபோதிலும் கடந்த காலங்களில் அமுல்படுத்தப்பட்ட மின்சார கட்டண உயர்வால் இலங்கை மின்சார சபை பெற்றுக்கொண்ட இலாபத்தை அதன் பங்காளர்களான பாவனையாளர்களுக்கு உரியவாறு பகிர்ந்தளிக்கப்பட வேண்டியது கட்டாயம். அது தொடர்பான தெளிவு பொதுமக்களுக்கு இருக்க வேண்டும்.

கடந்த 2023 ஆம் ஆண்டு மாத்திரம் இலங்கை மின்சார சபை வருமானமானது 62 பில்லியன்களாக பதிவாகியுள்ளது. அதேவேளை, இந்த ஆண்டு ஜனவரி மற்றும் பெப்ரவரி காலப்பகுதிகளில் கிட்டத்தட்ட 35 பில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளது. அப்படியாயின் இலங்கை மின்சாரசபை பெற்றுக்கொண்டுள்ள சுமார் 95 சதவீத இலாபத்தை பாவனையாளர்களுக்கு வழங்க வேண்டும். அதனை நேரடியாக மின்கட்டண குறைப்பின் ஊடாகவே வழங்க முடியும். அப்படியாயின் 22 வீதமென்ற மின்கட்டண குறைப்பை 35 வீதமாகக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுவே நியாயமும் கூட.

கடந்த 2023ஆம் ஆண்டு மின்சார சபையின் ஐந்தொகையில் 60 பில்லியன் ரூபா வட்டித் தொகையானது இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்தப்பட்டுள்ளது. அதேநேரம் இலங்கை மத்திய வங்கியின் வருமான பட்டியலானது 40 பில்லியனாக பதிவாகியுள்ளது. அப்படியாயின் கடந்த ஆண்டு இலங்கை மத்திய வங்கியின் பிரதான வருமானமானது இலங்கை மின்சார சபையிடமிருந்து அறவிடப்பட்டுள்ளமை தெட்டத்தெளிவாக தெரிகிறது. இந்த பெருந்தொகை கட்டணத்துக்கு இலங்கை மின்சார சபையின் ஊழல் மற்றும் முறையற்ற திட்டமிடல்களே மிகப்பிரதான காரணங்களாகும்.

இந்தியா - இலங்கை மின்னணு வர்த்தக உடன்படிக்கை

இந்தியா - இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையிலான எல்லை தாண்டிய மின்னணு வர்த்தக உடன்படிக்கை வரவேற்கத்தக்கது. உலக நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இதுபோன்ற எல்லை தாண்டிய வர்த்தக உடன்படிக்கைகள் வெற்றிகரமான ஒரு உபாயமாகவே பார்க்கப்படுகிறது.

அந்தவகையில் இந்தியாவுடனான மின்னணு வர்த்தக உடன்படிக்கை வரவேற்கத்தக்கது என்றார்.

# நடுத்தர மக்களை...

பாராளும்றத்தில் புதன்கிழமை (06) இடம்பெற்ற வரி திருத்தச் சட்டமூ ல திருத்தங்கள் மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு குற்றம்சாட்டிய அவர் மேலும் பேசுகையில்,

2024 ஜனவரி முதலாம் திகதி முதல் வற் வரி அதிகரிக்கப்பட்டு 97 பொருட்கள் புதிதாக வற் வரிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. வற் வரி அதிகரிப்பின் ஊடாக 400 பில்லியன் ரூபாவை பெற்றுக்கொள்ள அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.ஒவ்வொரு தனி நபரிடம் இருந்து 30 ஆயிரம் ரூபாவை வரியாக அறவிடுவது அரசாங்கத்தின் பிரதான இலக்கு வற் வரியை அதிகரித்துக் கொள்ளாமல் தேசிய வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முடியும். தேசிய இறைவரித் திணைக்களம் 956 பில்லியன் ரூபா வரி வருமானத்தை அறவிடவில்லை.சுங்கத் திணைக்களம் 57 பில்லியன் வரியையும், மதுவரித் திணைக்களம் 6.9 பில்லியன் ரூபா வரியையும் அற விடவில்லை.

இரண்டு மது உற்பத்தி நிறுவனங்கள் 70 சதவீத வரியை செலுத்த வில்லை.இந்த நிறுவனங்களின் அனுமதிப் பத்திரத்தை இரத்து செய்யுமாறு பாராளுமன்ற வழி வகைகள் பற்றிய குழு பரிந்துரைத்ததைத் தொடர்ந்து அந்த நிறுவனங்கள் வரி செலுத்தியுள்ளன.ஆகவே இந்த நிறுவனங்களிடமிருந்து முழுமையாக வரிகளை அறவிடுவதற்கு நிதியமைச்சு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# காற்று மாசு அதிகரிப்பு

இந்தச் சூழல் மக்களுக்கு பாதகமான உடல்நலப் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும் என்று அறிக்கை மேலும் கூறியுள்ளது.

மேலும், காலி கராப்பிட்டியில் 90 ஆகவும், புத்தளத்தில் 88 ஆகவும் குருநாகல் மற்றும் அனுராதபுரத்தில் 86 ஆகவும் காற்று மாசு சுட்டெண் பதிவாகியுள்ளது.

நாட்டின் காற்று மாசுக் குறியீடு 50ஐ தாண்டியிருப்பதால், உணர்திறன் உடையவர்கள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதால்> மக்கள் இது குறித்து கவனம் செலுத்துமாறு அந்த அமைப்பு கேட்டுக்கொள்கிறது.

இந்த காற்றின் நிலை அவ்வப்போது மாறலாம் என்றும் நாளையும் இந்த நிலையை எதிர்பார்க்கலாம் என்றும் கூறப்படுகிறது.

# சம்பள அதிகரிப்பால் சபையில் சர்ச்சை

பாராளுமன்றம் சபாநாயகர் தலைமையில் கூடிய பின்னர் பிரதமரித்திலான கேள்வி நேரத்தின்போது, மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு விவகாரம் தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேள்வியெழுப்பினர்.

இதன்போது பிரதமர் அதற்கு பதிலளிக்கையில், தான் விரிவான பதிலை எதிர்பார்ப்பதாக மரிக்கார் எம்.பி கூறியதையடுத்தே சர்ச்சை உருவானது.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளமை சரியானதா என்பதை மத்திய வங்கியின் ஆளுநர் தனது மனசாட்சியிடம் கேட்டுக் கொள்ள வேண்டும். ஒட்டுமொத்த மக்களும் மத்திய வங்கியை கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

ஆகவே, இந்த தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு வலியுறுத்தியுள்ளேன் என அரசாங்க நிதி தொடர்பாக குழுவின் தலைவரும்,பாராளுமன்ற உறுப்பினருமான ஹர்ஷ டி சில்வா சபையில் குறிப்பிட்டார்.

இதன்போது சபையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் இருந்ததுடன், அவரும் கேள்விகளுக்கு பதிலளித்தார்.

எதிர்க்கட்சியினர் முன்வைத்த கேள்விகளுக்கு நிதியமைச்சர் என்ற அடிப்படையில் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மத்திய வங்கியின் ஆளுநர் உட்பட அதிகாரிகள் கட்சித் தலைவர் கூட்டத்துக்கும், அரசாங்க நிதி தொடர்பான குழு கூட்டத்துக்கும் முன்னிலையாகியுள்ளனர்.

அறிக்கை கிடைக்கப்பெற்றதும் விவாதம் நடத்தி அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம்.மத்திய வங்கியின் ஆளுநரை பதவி நீக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

மாறாக ஹர்ஷ டி சில்வாவின் காலைவாரும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகிறது என்று குறிப்பிட்டு சபையில் இருந்து வெளியேறினார்.

# குற்றவாளிக்கு 12 வருட...

இது தொடர்பான வழக்கு விசாரணை நுவரெலியா மேல் நீதிமன்றத்தில் கடந்த 14 வருடங்களாக விசாரிக்கப்பட்டபோது, வழங்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் இந்த பகுதி நேர ஆசிரியர் குற்றவாளியாக இனங்காணப்பட்டதையடுத்து, இவருக்கு 12 வருட கடூழிய சிறை தண்டனை வழங்கப்பட்டது.

அத்துடன், குற்றவாளியாக இனங்காணப்பட்டவர் பாதிக்கப்பட்ட மாணவிக்கு ஐந்து இலட்சம் ரூபாய் நஷ்டஈடு வழங்க வேண்டும் எனவும் இத்தொகை வழங்காவிட்டால் மேலும் 2 வருட சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என நீதிபதி அறிவித்தார்.

# 'மெட்டா' வுக்கு 100...

உலகம் முழுவதும் பேஸ்புக், மெசஞ்சர் மற்றும் இன்ஸ்டாகிராம் சமூக ஊடகங்கள் செவ்வாய்க்கிழமை (05) இரவு திடீரென முடக்கப்பட்டன. பேஸ்புக், மெசஞ்சர் மற்றும் இன்ஸ்டாகிராம் போன்ற சமூக ஊடகங்கள் ஒரே நேரத்தில் முடக்கப்பட்டமை இதுவே முதல் முறையாகக் கருதப்படுகிறது.

சமூக ஊடக தளங்களான Facebook, Messenger மற்றும் Instagram ஆகியவற்றின் வீழ்ச்சியைத் தொடர்ந்து Meta பங்குகளும் 1.5 சதவீதம் சரிந்தன. ஃபேஸ்புக், மெசஞ்சர் மற்றும் இன்ஸ்டாகிராம் செயலிழந்ததற்குத் தொழில்நுட்பக் கோளாறுதான் காரணம் என தெரிவித்த 'மெட்டா' நிறுவனத்தின் தொழில்நுட்ப பிரிவு, சில மணி நேரம் கழித்து, பிழையைச் சரி செய்தது.

# முருகன், ரொபட் ஆகியோரை உயிருடன் விடுதலை செய்க

இது தொடர்பாக நான் மனோகணேசன் எம்.பியுடன் சென்று இலங்கையினுடைய வெளியுறவுத்துறை அமைச்சர் அலிசப்ரி மற்றும் நாட்டினுடைய ஜனாதிபதி ரணில் ஆகியோரிடம் பேசியிருந்தேன். அதேபோல, இந்தியாவிலே இருக்கிற இலங்கை தூதரகத்தினுடைய தூதரக அதிகாரியையும் கூட தொடர்பு கொண்டு சாந்தனின் வருகைக்காகப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் அந்த முயற்சிகள் தோல்வி கண்டிருந்தது. உயிருடன் வீட்டுக்கு வர ஆசைப்பட்ட சாந்தனின் உயிரற்ற உடல் மட்டும்தான் இங்கு வந்தது என்பது மக்கள் மனங்களிலே மிகப்பெரிய வேதனையை ஏற்படுத்தியுள்ளது. எனவே, தற்போது இந்தியச் சிறையில் இருக்கின்ற முருகன் ரொபட் பயஸ் உள்ளிட்டவர்களையாவது உயிருடன் விடுதலை செய்து அவர்களுடைய குடும்பத்தோடு அவர்கள் சேர வேண்டும் அதற்கு உயர்ந்த சபையின் ஊடாக தமிழ்நாட்டினுடைய முதலமைச்சரையும் பாரதத்தினுடைய பிரதமரையும் இலங்கையினுடைய அதிகாரிகளையும் அவர்களை இந்த மண்ணிலே தங்களுடைய குடும்பத்தோடு சேர்ந்து வாழக்கூடிய வகையிலே ஒரு ஏற்பாட்டை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

# “என்னை பதவியிலிருந்து அகற்றுவதற்கான சதி”

## கோட்டாபய ராஜபக்‌ஷ வெளியிடும் நூல்

2019 நவம்பரில் தான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட காலத்திலிருந்து, சில வெளிநாட்டு சக்திகள் மற்றும் உள்ளூர் கட்சிகள் என்னை ஆட்சியில் இருந்து அகற்றும் நோக்கத்தில் இருந்ததாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.


கோட்டாபய ராஜபக்‌ஷ புதன்கிழமை (6) வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும், “ஜனாதிபதி பதவியில் இருந்து என்னை வெளியேற்றுவதற்கான சதி” என்ற தலைப்பில் புத்தகத்தை வெளியிடுவதாகவும் அறிவித்துள்ளார். இந்த நாடு சுதந்திரமடைந்த முதல் அறுபது வருடங்களில் ஒருபோதும் அனுபவித்திராத வகையில் இன்று வெளிநாட்டுத் தலையீடும், உள் அரசியலின் சூழ்ச்சியும் இலங்கையில் உள்ளதாக ராஜபக்ச கூறினார்.

தன்னை வெளியேற்றுவதற்கான அரசியல் பிரச்சாரம் இலங்கையின் அரசியலில் ஒரு புதிய அம்சத்தைக் கொண்டுவந்தது என்றும், சுதந்திரம் பெற்றதில் இருந்து தேர்தலுக்குப் பிறகு அமைதியான அதிகாரப் பரிமாற்றங்களை மட்டுமே இந்நாடு அனுபவித்து வந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

எனவே, 2022ஆம் ஆண்டு நிகழ்வுகள் இந்த நாட்டின் எதிர்காலத்திற்கு கடுமையான தாக்கங்கள் நிறைந்தவை என்றும் கோட்டாபய ராஜபக்‌ஷ கூறியுள்ளார்.

சர்வதேச ரீதியில் அனுசரணையளிக்கப்பட்ட ஆட்சி மாற்ற நடவடிக்கையின் முதல் அனுபவத்தை புத்தகம் விளக்குகிறது எனவும் தெரிவித்துள்ளார்.






# மயங்கி விழுந்து இருவர் மரணம்

மயங்கி விழுந்து மரணமடைவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், புதன்கிழமை (06) மயங்கி விழுந்து இருவர் மரணித்துள்ளனர்.

கலவான-மீபாகம பிரதேசத்தைச் சேர்ந்த இமல்கா சட்சராணி என்ற 13 வயதுடைய பாடசாலை மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.


இவர் பாடசாலையில் 08ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவியாவார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போதும் அவர் இறந்துவிட்டதாக மருத்துவமனை செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளனர்.

மேலும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர், கடைக்குச் சென்று திரும்பும் போது திடீரென ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக வீதியில் விழுந்து மரணமடைந்துள்ளதாக மஹரகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பன்னிபிட்டிய - ஆரவல பகுதியைச் சேர்ந்த டெரன்ஸ் ஆனந்த எரிசூரிய (60) என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார். இவர், ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கணினி விஞ்ஞான கற்கைகள் பிரிவின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனிப்பட்ட தேவைக்காக மஹரகம நகருக்கு அருகில் உள்ள சந்தைக்குச் சென்றிருந்த போதே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது என்பது கண்டறியப்பட்டுள்ளது.

# தாயின் கணவரால் சிறுமி துஷ்பிரயோகம்



மஹியங்கனை, கெசல்பொத்த பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 12 வயதுடைய மாணவி ஒருவரை, காது கேளாத மற்றும் வாய் பேச முடியாத அவரது தாயின் இரண்டாவது கணவர், துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய சம்பவம் செவ்வாய்க்கிழமை (05) பதிவாகியுள்ளது.

குறித்த மாணவி பாடசாலை முடிந்து வீட்டுக்குச் செல்ல முடியாது என அதிபரிடம் தெரிவித்ததையடுத்து, இது தொடர்பில் பாடசாலையின் அதிபரால் மஹியங்கனை சிறுவர் மற்றும் மகளிர் பணியக அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

இதற்கமைய பாடசாலைக்குச் சென்ற அதிகாரிகளால், குறித்த சிறுமி மஹியங்கனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, வைத்தியர்களால் பரிசோதனை செய்த போது, மாணவி பல தடவைகள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, கெசல்பொத்த, மாபாக்கடையில் வசிக்கும் 48 வயதுடைய சந்தேக நபரைக் கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக மஹியங்கனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், குறித்த சிறுமியின் தாயும் காது கேளாத மற்றும் வாய் பேச முடியாத பெண் என்பது குறிப்பிடத்தக்கது.



# விழிப்புணர்வு கலந்துரையாடல்

எம்.யூ.எம்.சனூன்

கற்பிட்டி பிரதேசத்தில் நீண்ட நாட்களாக நிரந்தர தீர்வுகள் இன்றி காணப்படும் கழிவு முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வு கலந்துரையாடல் கற்பிட்டி பிரதேச சபையின் செயலாளர் மங்கள ராமநாயக்க தலைமையில் கற்பிட்டி பிரதேச சபையின் கூட்ட மண்டபத்தில் புதன்கிழமை (06) இடம்பெற்றுள்ளது .

இந்நிகழ்வில், கழிவு முகாமைத்துவம் பற்றிய முழுமையான விளக்கம் வடமேல் மாகாண கழிவு முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். ஏ. மாரசிங்கவினால் வழங்கப்பட்டுள்ளதுடன் “பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை தீ இட்டு எரிப்பதில் இருந்து விலகி, மீள் சுழற்சி முறையினை நடைமுறைப்படுத்தல்” என்ற கருத்து இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது .

மேற்படி கலந்துரையாடலில் கற்பிட்டி பிரதேச சபையின் முன்னாள் உபதலைவர், உறுப்பினர்கள், பொலிஸ் அதிகாரிகள், மத ஸ்தானங்களின் பரிபாலன சபை உறுப்பினர்கள், மீனவ சங்கத் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிப்பாளர்கள், கல்விப் பணிமனையின் அதிகாரிகள், பிரதேச செயலக அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# நீல பெண் கைது



கனகராசா சரவணன்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள பிறைந்துறைச்சேனை பகுதியில் போதைப்பொருள் வியாபாரி ஒருவரின் வீட்டைத் திங்கட்கிழமை (04) இரவு முற்றுகையிட்ட விசேட அதிரடிப்படையினர், வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பெண் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

நீல நிறம் கொண்ட புதிய ஐஸ் போதைப்பொருள் உட்பட, 4 கிராம் 470 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் பணம் என்பவற்றை மீட்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாழைச்சேனை விசேட அதிரடிப்படைக்குக் கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து, அம்பாறை-மட்டக்களப்பு உதவிப் பொலிஸ் பணிப்பாளரின் ஆலோசனைக்கமைய குறித்த வீட்டை முற்றுகையிட்டுள்ளனர்.

இதன்போது, பெண் ஒருவரைக் கைது செய்துள்ளதுடன், அவரிடமிருந்து 340 மில்லி கிராம் புதிய வகையான நீல நிறம் கொண்ட ஐஸ் போதைப்பொருள் மற்றும் வெள்ளை நிறமுடைய 4 கிராம் 130 மில்லி கிராம் உட்பட 4 கிராம் 470 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 8 ஆயிரத்து 750 ரூபாய் பணத்தை மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 36 வயதுடைய பெண்ணை விசேட அதிரடிப்படையினர் தம்மிடம் ஒப்படைத்துள்ளதாகவும், இவரது கணவர் ஏற்கெனவே போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட நிலையில், கைது செய்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனவும் இவரை நீதிமன்றில் முன்னிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நல்லை ஆதீனத்திடம் ஆசி பெற்ற யாழ். இந்திய துணைத் தூதுவர்

எஸ் தில்லைநாதன்



யாழ்ப்பாணத்துக்கான புதிய இந்திய துணைத் தூதுவராக பதவியேற்றுள்ள செவிதி சாய் முரளி, நல்லை ஆதீன தேசிக ஞானசம்பந்த பிரமச்சாரிய சுவாமிகளைச் செவ்வாய்கிழமை (05) சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பில், சமய ரீதியான தற்போதைய நிலைமைகள், மஹா சிவராத்திரி தினத்தினை முன்னிட்டு இந்திய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் சமய நிகழ்வுகள், இளைய சமுதாயத்தினால் மாறிவரும் சமய புறழ்வான பழக்கவழக்கங்கள், எதிர்காலத்தில் சமய சித்தார்த்தம் தொடர்பான விடயங்கள் தொடர்பிலும் சமயத் தலைவர்களினால் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன், இந்திய தூதர அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளனர்.

# முச்சக்கரவண்டி திருட்டு

செ.திவாகரன் டி.சந்ரு




நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பங்களாஹத்த பகுதியில் வீட்டுக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டியினை இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ள சம்பவம் திங்கட்கிழமை (04) இடம்பெற்றுள்ளது.

cp YS 3772 என்ற இலக்கத்தகடு இலக்கத்தைக் கொண்ட டி.வி.எஸ். கறுப்பு நிற முச்சக்கரவண்டியினை உரிமையாளர் எரிபொருள் இன்றி, தனது வீட்டுக்கு முன் நிறுத்தப்பட்டிருந்ததாக உரிமையாளர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த முச்சக்கர வண்டி தொடர்பான தகவல் கிடைத்தால் 077-5343893 என்ற இலக்கத்திற்கு அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு உடனடியாக தெரிவிக்குமாறு நானுஓயா பொலிஸார் மற்றும் உரிமையாளர் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# பொலிஸார் மீது தாக்குதல் இருவர் கைது

டிவிஜித்தா

பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்டு தப்பிச் செல்ல முயன்ற மணல் கடத்தல்காரர்கள் இருவர் புதன்கிழமை (06) கைது செய்யப்பட்டுள்ளனர்.

நுணாவில் பகுதியில் இருந்து சாவகச்சேரி நோக்கி வந்து கொண்டிருந்த டிப்பர் வாகனமொன்றை சாவகச்சேரி போக்குவரத்து பொலிஸாரால் வழி மறித்தபோது குறித்த டிப்பர் நிறுத்தாமல் சென்றுள்ளதையடுத்து டிப்பர் வாகனத்தைத் துரத்திச் சென்ற பொலிஸார் சாவகச்சேரி சுற்று வட்டத்தில் வைத்து அதனை மறித்துள்ளனர். இதன்போது டிப்பர் சாரதி மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் உட்பட மூவரும் இணைந்து பொலிஸார் மீது இரும்பு கம்பிகளால் தாக்குதல் நடத்த முற்பட்டுள்ளதாகவும் அவர்களை நகரப் பகுதியில் கடமையிலிருந்து பொலிஸார் சுற்றி வளைத்து இருவரைக் கைது செய்துள்ளதுடன், எனினும் டிப்பர் வாகனத்திற்கு முன்பாக வழிகாட்டி வந்த ஒருவர் மோட்டார் சைக்கிளைக் கைவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

மேலும், மணல் கடத்தி வரப்பட்ட டிப்பர் வாகனத்தையும் மோட்டார் சைக்கிளையும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன் தப்பிச் சென்றவரை கைது செய்ய சாவகச்சேரி பொலிசஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.





# மீனவர்கள் போராட்டம்

எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார்-பள்ளிமுனை கிராம மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் துரித நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கோரி லூசியா மீனவர் கூட்டுறவு சங்கத்தின் ஏற்பாட்டில் குறித்த கிராம மக்களால் பள்ளிமுனை மீன் சந்தை கட்டிடத் தொகுதிக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டமொன்றைப் புதன்கிழமை (6) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கிராம மக்கள் முன்வைத்துள்ள பிரச்சினைகளுக்குத் துரித கதியில் நடவடிக்கைகளை மேற்கொண்டு உரியத் தீர்வை வழங்க வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்துள்ளதுடன் போராட்டத்தின் பின் தமது கோரிக்கை அடங்கிய மகஜர், மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது.




## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (2) ஆம் பிரிவின் பிரகாரம்இ 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில், செயின்ட் ஆண்ட்ரூஸ் ரிசார்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் தனது பெயரை ஜெட்வாஷ் (பிரைவேட்) லிமிடெட், என மாற்றியுள்ளது தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம். மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 8 இன் விதிகளின்படி.

**கம்பனியின் பழைய பெயர் :** செயின்ட் ஆண்ட்ரூஸ் ரிசார்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
**கம்பனியின் இலக்கம் :** பீ வீ 84704
**பதிவு அலுவலக முகவரி :** “ஜெட்விங் ஹவுஸ்”, இல. 46/26, நவம் மாவத்தை, கொழும்பு 02
**கம்பனியின் புதிய பெயர் :** ஜெட்வாஷ் (பிரைவேட்) லிமிடெட

**பணிப்பாளர் சபையின் உத்தரவின்படி**
**கோர்பரேட் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட்**
**செயலாளர்கள்**
**ஜெட்வாஷ் (பிரைவேட்) லிமிடெட்**

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் அரசாங்க பலத்தை உறுதி செய்வதற்கா?

சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தனவின் அண்மைய செயற்பாடுகள் சட்டத்துக்கு முரணானவையாக அமைந்திருப்பதாகத் தெரிவித்து எதிர்க்கட்சியினர் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையைக் கையொப்பமிட்டு பாராளுமன்றத்தின் பிரதி செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பித்திருந்தனர்.

அரசியலமைப்பை மீறும் வகையில் சபாநாயகர் செயலாற்றுவதாகவும், பாராளுமன்றத்தினதும், அரசியலமைப்பு மீதும் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை இல்லாமல் செய்யும் வகையில் இவரின் நடத்தை அமைந்திருப்பதாகவும், அரசாங்கத்துக்கு ஆதரவாகச் சபாநாயகர் செயற்படுகின்றார் என்பது தெளிவாகத் தென்படுகின்றது, பக்கசார்பின்றி பாராளுமன்றத்தின் சகல அங்கத்தவர்களின் உரிமைகள் மற்றும் வரப்பிரசாதங்களைப் பேணுவதற்கு தம்மை அர்ப்பணித்துள்ள சபாநாயகர், அவற்றை மீறும் வகையில் செயற்பட்டுள்ளார். தமது பொறுப்பை மீறும் வகையில் செயலாற்றியுள்ளார். இதனால் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவதாக இந்த பிரேரணையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

சரி, எதிர்க்கட்சியினர் இதுவரையில் பாராளுமன்றத்தில் கொண்டு வந்த அரசாங்கத்துக்கு எதிரான சகல தீர்மானங்களும் தோல்வியைத் தழுவியிருந்தன. தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராகவும் அண்மையில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த் தரப்பு கொண்டு வந்து, அது சபையில் தோல்வியடைந்தது. அந்த எல்லா சந்தர்ப்பங்களிலும் அரச தரப்பு தமது பலத்தை நிரூபித்திருந்தது.

இந்நிலையில் சபாநாயகர் என்பவர் இரு தரப்புக்கும் பொதுவான நபர் என்பதே பொருள். அவர் அரசாங்க தரப்பிலிருந்து அந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டாலும், அவரின் கடமைகள் நடுநிலையானதாக அமைந்திருக்க வேண்டும். தற்போதைய சபாநாயகரின் சில செயற்பாடுகள் பக்கசார்பாக அமைந்திருந்தாலும், அவருக்கு எதிரான இந்த நம்பிக்கையில்லா பிரேரணையில் எதிர் தரப்பினர் ஒன்றிணைந்து செயலாற்றினாலும், அரச தரப்பு வழமை போன்று ஒன்று சேரும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பாக மொட்டுக் கட்சியிலிருந்து பாராளுமன்றத்துக்குத் தெரிவாகிய சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தனவுக்கு, அக்கட்சியின் ஆதரவு தற்போதும் உள்ளது. அவரின் நடத்தைகள் பெரும்பாலும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் செயற்பாடுகளைச் சார்ந்ததாக அமைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. இதனால் அரசாங்கத்தின் ஆதரவுக்கு அவருக்கு நிச்சயம் இருக்கும்.

மொட்டுக் கட்சியின் பிரதான செயற்பாட்டாளரான பசில் ராஜபக்ஷ நாடு திரும்பியுள்ள நிலையில், இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்து, தமது கட்சியின் பலத்தைத் தொடர்ந்தும் நிரூபிப்பதில் அவர் அக்கறை கொண்டிருப்பார் என்றே கருதப்படுகின்றது.

எனவே, ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என பொது வெளியில் பல்வேறு கருத்துகளை வெளியிட்டு வரும் மொட்டுக் கட்சி அங்கத்தவர்களை மீண்டும் ஓரணியில் திரட்டும் ஒரு செயற்பாடாகவே இந்த சபாநாயகருக்கு எதிரான எதிர்க்கட்சியின் நம்பிக்கையில்லாத் தீர்மானம் அமைந்திருக்கும் என்பது தெளிவாகின்றது.

அத்துடன், இந்த தீர்மானத்தில் அரசாங்கம் வெற்றியீட்டும் பட்சத்தில், சபாநாயகரின் செயற்பாடுகளை அவை உறுதி செய்வதாகவே கருதப்படும். பொது மக்களுக்குக் காண்பிக்கும் ஒரு வெற்று நாடகமாகவே இது அமைந்திருக்கும்.


தமிழ்Mirror க்கு
எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



# ஒழிக்க வேண்டும் என்பதில் ஒரே நிலைப்பாட்டில் உள்ளன

முருகாநந்தன் தவம்

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் உருவான 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் ஊடாக மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரம் ஆட்சியிலிருந்த எந்த அரசினாலும் மாகாணங்களுக்கு இதுவரையில் வழங்கப்படாத நிலையில் அந்த பொலிஸ் அதிகாரத்தை 13ஆவது திருத்தத்திலிருந்தே முற்றாகத் துடைத்தெறியப் பாராளுமன்றத்தில் 22ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கான தனிநபர் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தீர்வு காண முடியாதிருந்த சிங்களவர்-தமிழர் இனப்பிரச்சினை மற்றும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன ஆகியோருக்கு இடையில் 1987 ஜூலை மாதம் 29ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்படி இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் வரலாற்றுப் பூர்வமான தாயகம் என்றும் அவை இரண்டையும் ஒரே மாகாணமாக இணைப்பது என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

மேலும், இம்மாகாணத்திற்கு தேர்தல் நடத்தப்பட்டு மாகாண சபை ஒன்றும் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களை உள்ளடக்கிய அமைச்சரவை அமைப்பது எனவும் ஒப்புக் கொள்ளப்பட்டது. கிழக்கு மாகாணத்தை வட மாகாணத்துடன் இணைப்பது குறித்து, கிழக்கு மாகாணத்தில் மக்கள் வாக்கெடுப்பு நடத்தி இறுதி முடிவு காண்பது எனவும் உடன்பாட்டில் கூறப்பட்டது.இந்த உடன்பாட்டில் கூறப்பட்ட மேற்கண்ட முக்கிய பகுதிகளை இலங்கையின் அரசியல் அமைப்புச் சட்டத்தில் இடம்பெறச் செய்வதற்காக ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான அரசு 1988இல் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியது. அதே நாளில் மாகாண சபைகள் அமைப்பதற்கான சட்டமும் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. தமிழர்களின் நீண்டகால போராட்டத்திற்கு ஒரு தீர்வாக நாட்டில் மாகாண சபைகளை உருவாக்கி அதன் மூலம் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் நோக்கில், இந்த 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் கொண்டு வரப்பட்டது.

இதனூடாக இலங்கையில் 8 மாகாண சபைகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன், வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் இணைந்த மாகாண சபைகளாக அப்போது அறிவிக்கப்பட்டிருந்தன. அத்துடன், மாகாணசபைகளுக்குக் காணி, பொலிஸ் அதிகாரங்களும் வழங்கப்பட்டன. இதன்மூலம் இலங்கை அரசியலமைப்பில் செய்யப்பட்ட 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் உரிமை கோரிப் போராடிய தமிழர்களுக்கு நம்பிக்கையையும் அவர்களுக்கான அங்கீகாரத்தையும் ஏற்படுத்தியிருந்தது. ஆனால், இந்த 13ஆவது அரசியலமைப்புத்திருத்தத்தின் ஊடாக தமிழர்களுக்கு அதிகமாக அரசியல் அதிகாரங்கள் கொடுக்கப்படுகின்றன என்று பேரினவாத தலைவர்கள், கட்சிகள், சிங்களவர்கள் எதிர்த்தனர். அதேவேளை, தமிழ் மக்களுக்கு, இந்த ஒப்பந்தம் போதுமானளவு அதிகாரங்களைப் பகிரவில்லை என்று விடுதலைப் புலிகளும் இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் ஊடான இந்த 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை எதிர்த்தனர்.

இந்தியாவின் வற்புறுத்தலினால் இலங்கை அரசியலமைப்பில் செய்யப்பட்ட 13ஆவது திருத்தத்தின் ஊடாக தமிழ் மக்களுக்கு எந்தவித அதிகாரங்களும் கிடைத்து விடக்கூடாது என்பதில் கடும்போக்கு சிந்தனையிலிருந்த பேரினவாதிகள் இந்த திருத்தத்தைக் கடுமையாக்க எதிர்த்தனர். இதனை விளைவாக 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக 1988இல் தெரிவான வடகிழக்கு மாகாணசபையை 1990இலேயே கலைத்தனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்த மாகாண சபையானது பதினாறு மாதங்கள் மட்டுமே செயற்பட முடிந்தது.

இது நடந்து 17 ஆண்டுகளின் பின்னர், 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக இணைக்கப்பட்டிருந்த வடக்கு, கிழக்கு மாகாணங்கள், தனித்தனி மாகாணங்களாக இருக்க வேண்டும் என வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கு எதிராகப் பேரினவாதக் கட்சிகளில் ஒன்றான சோமவன்ச அமரசிங்க தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணி என்றழைக்கப்படும் ஜே.வி.பி., வடக்கு கிழக்கின் இணைப்பானது கிழக்கு மாகாண மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதிப்பதாகக் கூறி 2006ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது.

இந்த வழக்கை விசாரித்த பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான, 5 நீதிபதிகளைக் கொண்ட உயர்நீதிமன்ற அமர்வு. 1987இல் கைச்சாத்திடப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்துக்கு அமைய, ஒன்றாக்கப்பட்ட இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்கள் செல்லுபடியாகாது. அப்போது ஜனாதிபதியாக இருந்த ஜெயவர்த்தன நிர்வாக உத்தரவு ஒன்றின் மூலமே வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்தார். எனவே, இது சட்டப்படி செல்லாது என்பதனால் கிழக்கு மாகாணத்துக்குத் தனியானதொரு தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று 2006 அக்டோபர் 16ஆம் திகதி உத்தரவிட்டது.

இந்திய-இலங்கை நாடுகளுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்ட நிலையில் அந்த இணைப்பு செல்லாது என உயர் நீதிமன்றத்தில் வழக்க தாக்கல் செய்யப்பட்டபோது வடக்கு, கிழக்கு இணைப்பைத் துண்டிக்க இந்தியா அனுமதிக்காது என்றே தமிழர் தரப்புக்கள் முழுமையாக நம்பியிருந்தன. ஆனால், வடக்கு,கிழக்கு இணைப்பைத் துண்டித்து உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தபோதும், அதைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் மட்டும் தேர்தல் நடத்தப்பட்டபோதும் இந்திய அரசு அதில் தலையிடவில்லை.


தமிழர்களுக்குத் தீர்வாக இந்திய-இலங்கை அரசுகளுக்கிடையிலான ஒப்பந்தத்தின் ஊடாக கொண்டுவரப்பட்ட 13ஆவது அரசியலமைப்புத்திருத்த சட்டத்தின் மூலம் 1988இல் தெரிவான வடகிழக்கு மாகாணசபை 1990இலேயே கலைக்கப்பட்டது.இந்த திருத்தத்தின் ஊடாக இணைக்கப்பட்ட வடக்கு,கிழக்கு மாகாணங்கள் 2006இல் பிரிக்கப்பட்டன. இந்த இரு நடவடிக்கைகளின் மூலம் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் முதுகெலும்பையே உடைத்தெறிந்த பேரினவாத ஆட்சியாளர்களும் பேரினவாத கட்சிகளும் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஆயுளை முற்றாக முடிக்க முடிவெடுத்துள்ளன.

தமிழர் பிரச்சினை குறித்துப் பேசும் ஒரே இலங்கை அரசியலமைப்பு சட்டப் பிரிவாக 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மட்டுமே இன்றுவரை குற்றுயிரும் குலையுயிருமாக இருந்துவரும் நிலையில், 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை உயிரற்ற உடலாக்க தற்போது பேரினவாத கட்சியான 'பிவிதுரு ஹெலஉறுமய'வின் தலைவர் உதய கம்மன் பில, 13ஆவது அரசியலமைப் புத்திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரத்தை இரத்து செய்யும் 22ஆவது அரசியலமைப்பு திருத்தத் தனிநபர் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் கடந்த 21ஆம் திகதி சமர்ப்பித்துள்ளார். இந்த சட்டமூலத்தை இன்னொரு பேரினவாதியான விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி கட்சி எம்.பியான மொஹமட் முஸம்மில் வழிமொழிந்துள்ளார்.

தற்போது உதய கம்மன் பிலவின் இந்த மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரத்தை. இரத்து செய்யும் வகையிலான 22ஆவது திருத்தத் தனிநபர் சட்டமூலம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், இதற்கு எதிராகத் தமிழ் தரப்புக்கள் உயர் நீதிமன்றத்தை நாடவுள்ளன. இதற்கு உயர் நீதிமன்றம் தனது பரிந்துரைகள், வியாக்கியானத்தை வழங்கும். அதில் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரத்தை நீக்க சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என உயர் நீதிமன்றம் வலியுறுத்தாது விட்டால் தனிநபர் சட்டமூலம் விவாதத்திற்கு எடுக்கப்பட்டு வாக்களிப்புக்கு விடப்படும். அவ்வாறு வாக்களிப்புக்கு விடப்பட்டால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டு மாகாணங்களுக்கான பொலிஸ் அதிகாரம் ஒழிக்கப்படும்.

13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை ஒழிக்க வேண்டுமென்பதில் சிங்களத்தரப்புக்கள் அனைத்தும் ஒரே நிலைப்பாட்டிலேயே உள்ளன. 20ஆவது அரசியலமைப்புத் திருத்தம் ஊடாக இதனை அவர்கள் நீக்க எடுத்த முயற்சிகள் கை கூடாத நிலையில் தற்போது 22ஆவது அரசியலமைப்புத் திருத்தத் தனி நபர் சட்டமூலம் ஊடாக தமது நோக்கத்தை அவர்கள் நிறைவேற்ற முயற்சிக்கின்றனர். அத்துடன், அரசியலமைப்பு, பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் மற்றும் பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறும் ஒருவரே பாராளுமன்ற சபாநாயகராக இருப்பதும் இந்த மாகாணங்களுக்கான பொலிஸ் அதிகாரத்தை நீக்கும் தனிநபர் சட்டமூலம் பாராளுமன்றத்தில் உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானங்கள், பரிந்துரைகளை மீறியேனும் நிறைவேற்றப்படுமென்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

13ஆவது அரசியலமைப்பிலுள்ள பொலிஸ் அதிகாரத்தைத் தவிர, 3ஆவது பட்டியலில் உள்ள மற்ற விடயங்களை வழங்குவதில் எமக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அண்மையில் அறிவித்திருப்பதும் இதனையே உறுதிப்படுத்துகின்றது.



## வாழ்வியல் தரிசனம்

ஒருவர் தனது சுயநலத்துக்காக ஒருவரிடம் உதவி கேட்பதற்காக அவரை அணுகிக் கண்டபடி புகழ்ந்தால், அதைக் கேட்ட நபர், அதை உண்மை என நம்பினால், அவர் தனது உண்மை நிலையை உணராதவராகின்றார்.

பொய்களை நம்பினால், கேட்பவர் திறமை மங்கிவிடும். பத்து பேர் போலியான விடயங்களைச் சொன்னால், அதை நம்புபவர்கள் அப்பாவிகளாகவும் உலகம் தெரியாதவர்களாகவும் இருப்பார்கள்.

கெட்டிக்காரர்களையும் முட்டாள்களாக்கச் சிலர் பொய் புளுகுகளைப் பிரயோகிப்பதுண்டு. இத்தகைய பாவச் செயல் அவர்களைத் திரும்பத் தாக்கும்.

ஏமாற்றி வாழும் கூட்டம் இருக்கின்றது. அடிக்கடி தவறு செய்வது, கடவுளை ஏமாற்ற எண்ணுவதாகும். தவறுகளைத் தொடர்ந்து செய்பவர்கள் நிம்மதியாக வாழமுடியாது.

காலம் சும்மா சுழல்வதில்லை. நல்ல மனிதர்களுக்கு நன்மைகளையும் தகாத செயலைச் செய்பவர்களுக்குத் தகுந்த தண்டனைகளையும் வழங்கி வருகின்றது. மரணத்திலும் வாழ்பவர்கள் ஒழுக்கசீலர்களே!

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### காடுகளினால் சூழப்பட்ட பாடசாலை



முல்லைத்தீவு-தேவிபுரம் பாடசாலையின் சூழலில் உள்ள காடுகளைத் துப்பரவு செய்வதற்குப் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அரச காணியின் 20 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் அதிக மரஞ்செடி கொடிகள் வளர்ந்திருப்பதன் காரணமாகப் பாம்புகள் பாடசாலைக்கு வருவதாகவும் பன்றிகளின் நடமாட்டம் கூடுதலாகக் காணப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், இக்காடுகளில் சமூக விரோத செயற்பாடுகள் இடம் பெறுவதாகவும் பாடசாலைக்கு அருகில் மதுப் போத்தல்கள், நிறைந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கும் பெற்றோர், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளரிடம் பாடசாலை சூழலில் காணப்படுகின்ற அரச காணிகள் துப்பரவு செய்யப்படாமல் காடு வளர்ந்து காணப்படுகின்றது.

காணியற்ற குடும்பங்களுக்குக் குறித்த காணியினை பிரித்து வழங்குங்கள் அல்லது பிரதேச செயலகத்தின் பொறுப்பில் குறித்த காணிகளைத் துப்புரவு செய்து மாணவர்கள் ஆசிரியர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யுங்கள் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நடராசா கிருஸ்ணகுமார்

# சர்வதேச மகளிர் தினம் மார்ச் மாதம் எட்டாம் திகதி



பெரியசாமிப்பிள்ளை செல்வராஜ்
(முன்னாள் தூதுவர்
(மஸ்கெலியா

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம். வைய வாழ்வு தன்னில் எந்த வகையினும் நமக்குள்ளே தாதர் என்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே", என்று எடுத்துரைத்தவர் மகாகவி பாரதியார்.

உலகெங்கும் வாழும் பெண்கள் தொடர்பான விழிப்புணர்வுகளும், அதனுடன் இணைந்த உரிமைப் போராட்டங்களும் எழ ஆரம்பித்து நூற்றாண்டுகளைக் கடந்து விட்டது.

வேலை நேரத்தைக் குறைத்தல் இ வேதனத்தை உயர்த்துதல், ஆகியவற்றை வலியுறுத்தி சுமார் 15,000 உழைக்கும் பெண்கள் அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகரில் 1908ஆம் ஆண்டு மார்ச் மாதம் எட்டாம் திகதி நடத்திய ஒரு பேரணியே இத்தின உருவாக்கத்துக்கான அடித்தளமாக அமைந்தது.

அதற்கு அடுத்த ஆண்டு அமெரிக்க சோஷலிஸ்ட் கட்சியானது இந்த நாளை தேசிய பெண்கள் தினமாக பிரகடனப்படுத்தியது.

1910ஆம் ஆண்டு டென்மார்க் நாட்டின் தலைநகரான கோபன்ஹேகனில் நடைபெற்ற உழைக்கும் பெண்களுக்கான சர்வதேச மகாநாட்டில் மார்க்சிய தத்துவவாதியான கிளாரா ஜெட்கின் என்ற பெண்மணி, இந்த நாளினை சர்வதேச பெண்கள் தினமாக அனுசரிக்க வேண்டும் என்ற யோசனையை முன் வைத்தார்.

அந்த மகாநாட்டில் கலந்து கொண்ட 17 நாடுகளைச் சேர்ந்த 100 பெண்கள் இந்த ஆலோசனையினை ஒருமனதாக ஏற்றுக் கொண்டனர்.

முதல் முதலாக 1911ஆம் ஆண்டு ஆஸ்திரியா, டென்மார்க், ஜேர்மனி, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் மகளிர் தினம் கொண்டாடப்பட்டது.

1975ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை இந்த தினத்தினை 'அனைத்துலக பெண்கள் தினமாக' அங்கீகரித்தமையானது வரலாற்றுச் சிறப்புமிக்க ஓர் அம்சமாகும்.

கடந்து வந்த காலங்கள், பெண்களின் உரிமைகளை எடுத்துரைத்தல், பெண்களின் சாதனைகளை நினைவு கூரல், பெண்களின் சமத்துவத்திற்கான கல்வியை ஊக்கப்படுத்தல், பெண்களுக்கும், ஆண்களுக்கும் இடையிலான பாலின சமத்துவத்தினை ஏற்படுத்துதல், அது சம்பந்தமான விழிப்புணர்வினை பரப்புதல், அவற்றைச் செயல் உருவில் மாற்றுவதற்கான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லுதல், போன்ற இன்னோரன்ன விடயங்களுக்கான தன்மை கொண்டதாக இந்த நாள் கருதப்படுகின்றது.

சமூக இ பொருளாதார, அரசியல், கலை, கலாசாரம் போன்ற பல துறைகளில் பெண்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தினையும், அவர்களது அர்ப்பணிப்புகளையும், தியாகங்களையும், நினைவுபடுத்தும் ஒரு நாளாக இந்த நாள் அமைகின்றது.

நடப்பு ஆண்டான 2024இல், சர்வதேச மகளிர் தினத்திற்கான கருப்பொருளாக அமைவது *'Inspire inclusion'* என்பதாகும்.

"பெண்களில் முதலீடு செய்யுங்கள், முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துங்கள்" என்பதே இந்த ஆண்டு மகளிர் தினத்தின் கருப்பொருள் ஆகும். பெண்களை அனைத்து துறைகளிலும் ஈடுபடுத்துவதும், அவர்களின் மதிப்பைப் புரிந்துகொள்வதும் இதன் நோக்கம் ஆகும்.

இந்த வகையில் , 1960ஆம் ஆண்டு, எமது நாடான ஸ்ரீலங்காவானது உலகின் முதலாவது பெண் பிரதமரை உருவாக்கிய நாடு என்ற பெருமையினை பெறுகின்றது.

இதேபோல, 1994ஆம் ஆண்டில் முதலாவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியினை தேர்ந்தெடுத்த நாடாக எமது நாடு திகழ்கின்றது.

இது ஒரு பெருமை மிக்க விடயமாக இருந்தாலும் கூட, இன்றும் பாராளுமன்றத்தில் தீர்மானம் எடுக்கும் செயற்பாடுகளில் பெண்களின் பங்களிப்பானது குறைவாக இருப்பது கவலைக்குரியதொரு விடயமாகும்.

எமது நாட்டிலுள்ள இருநூற்று இருபத்தைந்து பாராளுமன்ற உறுப்பினர்களில், பன்னிரெண்டு உறுப்பினர்கள் மாத்திரமே பெண்களாவர். இதனது அர்த்தம் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெண்களின் எண்ணிக்கை சுமார் ஐந்து வீதம் மாத்திரமே!

பெருந்தோட்டத் துறையினைச் சார்ந்த தேயிலை, இறப்பர், தென்னை ஆகிய தோட்டங்களில் தொழில் புரியும் பெண்களில் அனேகமானோர் உழைப்பாளர் வர்க்கத்தைச் சார்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

இவர்களே எமது நாட்டின் முதுகெலும்பாகவும். பொருளாதாரத்தினை வழிநடத்திச் செல்பவர்களாகவும் உள்ளனர்.

இதுபோல ஆடைத் தொழிற்சாலைகளிலும் பெருமளவான பெண் தொழிலாளர்கள் கடமையாற்றுகின்றனர்.

இன்று மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கையானது அதிகரித்துக் கொண்டு செல்கின்றது.

இன்னும் முகாமைத்துவத் துறைகளிலும் மற்றும் பல்வேறுபட்ட தொழில் துறைகளிலும் பெண்களின் பங்களிப்பு அதிகரித்து வருகின்றது.

சர்வதேச ரீதியாக இன்று பெண்கள் சகல துறைகளிலும் முன்னேறி, தத்தமது பணிகளில் மிகவும் உயர்நிலை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றனர்.

பல்கலைக் கழக அனுமதியில் கூட இன்று பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதனை நோக்கக் கூடியதாக உள்ளது.

இதற்கு அடிப்படைக் காரணமாக அமைவது அவர்கள் கல்வியில் காட்டும் அக்கறை ஆகும். கல்வியானது சமூகத்தில் ஒரு விழிப்புணர்வை உருவாக்குவதாகக் கருதப்படுகின்றது.

கல்வியானது அவர்களுக்குத் தன்னம்பிக்கையைக் கொடுத்து, அவர்களது அறிவாற்றலை விருத்தி செய்து, தாமே சுயமாக முடிவெடுக்கும் ஆற்றலைக் கொடுப்பதோடு, எத்தகையப் பிரச்சினைகள் ஏற்பட்டாலும், அந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் ஆற்றலை வளர்த்தெடுப்பதுடன், தனது தொழிலிற்கும், குடும்பத்தின் தேவைக்கும் ஏற்ப தனது நேரத்தைச் சரியாகத் திட்டமிட்டுச் செயலாற்ற வழி சமைக்கின்றது.

இன்னும் பலர் தமது அனுபவத்தின் மூலமாகவும், திறமையின் மூலமாகவும், தொழில் வல்லுநராகவும், தொழிலதிபர்களாகவும், சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டும், குடும்பப் பெண்களாகவும், ஆசிரியர்களாகவும், விஞ்ஞானிகளாகவும்,கணக்காளர்களாகவும்,அரசியல்வாதிகளாகவும், இன்னும் பல்வேறு துறைகளில் ஈடுபட்டு தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்திச் சென்று கொண்டிருக்கின்றனர்.

ஒரு நாடு சுபீட்சமாக இருக்க வேண்டும் என்றால், அந்த நாட்டில் உள்ள குடிமக்கள் சுபீட்சமாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள பெண்களும், தமது குடும்பங்களைச் சரியாக வழி நடத்திச் செல்லும் பொழுது, அது சமூகத்தில் ஒரு மாற்றத்தை உருவாக்கி, இறுதியாக நாடு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கிச் செல்ல வழி வகுக்கின்றது.

நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு அவர்கள் ஆற்றும் பங்களிப்பு மிகவும் உன்னதமாகும்.

உலக வரலாற்றில் மிகச் சிறந்த பெண் தலைவர்களைக் கூட நாடுகள் உருவாக்கி இருக்கின்றன.

அந்த வகையில் மறைந்த பெண் பிரதமர்களான பாரதப் பிரதமர் இந்திரா காந்தி, ஸ்ரீலங்கா பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, பிரித்தானியப் பிரதமர் மார்கரெட் ஹில்டா தாட்சர், பாகிஸ்தானியப் பிரதமர் பெனசீர் பூட்டோ, இஸ்ரேலிய பிரதமர் கோல்டா மேர், பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் மியன்மார் தலைவர் ஆங் சான் சூகி, தற்போதைய பங்களாதேஷ் பிரதமரான ஷேக் ஹசீனா, இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்மு மற்றும் இத்தாலி, பேரு ஸ்லோவேனியா, கிரீஸ், டென்மார்க், ஸ்லோவேக்கியா, மொல்டோவா, ஜோர்ஜியா, ஐஸ்லாந்து, தான்சானியா, உகண்டா போன்ற இன்னும் பல நாட்டுப் பெண் தலைவர்களை எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

இவர்களுள் பலர் உலக வல்லரசு நாடுகளே அஞ்சும் வண்ணம் தமது ஆளுமையை வெளிப்படுத்திய தலைவர்களாகவும் காணப்பட்டனர்.

இன்று பெண்கள் பாரதியார் கண்ட புதுமைப் பெண்களாகப் பல துறைகளிலும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான மாற்றங்கள் இன்றைய காலகட்டத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றது.

"எந்த குடும்பத்தில் உள்ள பெண்மை கொண்டாடப்படவில்லையோ, அந்த வீடும் பாழ், அந்த நாடும் பாழ்", என்றார் சுவாமி விவேகானந்தர்.

இவரின் கூற்றிலிருந்து பெண்களின் முக்கியத்துவத்தினை உணர முடிகின்றது.

ஆயினும், இன்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலிருந்து, குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தொழில் ரீதியாகச் செல்கின்ற பெண்கள் பல்வேறு பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருப்பதையும் நோக்கக்கூடியதாக உள்ளது.

அவர்களது வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட வேண்டும். அவர்களுக்கு நியாயமான வேதனம் வழங்கப்படல் வேண்டும். அவர்களது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அவர்கள் அமைதியான, மகிழ்ச்சியான வாழ்க்கை முறையினை முன்னெடுத்துச் செல்ல தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவது அவசியம்.

அந்தந்த நாடுகளில் இருக்கும் அரசுகளும் தொழில் தருநர்களும் அதற்கான ஏற்பாட்டைச் செய்தல் அவசியமாகும்.

இதுபோல, குடும்பப் பெண்களும் இன்று பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்த வண்ணம் தமது வாழ்வை நடாத்திச் செல்கின்றனர். குடும்ப வன்முறை வறுமை, அடக்கு முறை, தொழில் செய்யும் இடங்களில் நிலவும் ஏற்றத் தாழ்வுகள், பாலியல் தொந்தரவுகள், போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளில் சிலவாகும்.

இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றைத் தீர்ப்பதற்குரிய சகல முயற்சிகளையும் மேற்கொள்வது அவசியம்.

உலகில் உள்ள அனைத்து பெண்களதும், சிறுமிகளதும், பாதுகாப்பானது அனைத்து சந்தர்ப்பங்களிலும் உறுதிப் படுத்தப்படல் அவசியம்.

அனைத்து மூதாட்டிகளுக்கும், தாய்மார்களுக்கும், சகோதரிகளுக்கும், பெண்களுக்கும், இனிய மகளிர் தின வாழ்த்துக்கள்.



# நான் என்னையறிந்த போது



இரா.சிவலிங்கம்

நிலா ஒளியின் வெளிச்சத்தில் குமாரியின் குடும்பத்தினர் மிகவும் சந்தோசமாக உரையாடிக் கொண்டிருந்தார்கள். பௌர்ணமி முடிந்து இரண்டு தினங்களாகியும் நிலவின் வெளிச்சம் இன்னும் இருந்தது. குமாரி க.பொ.த சாதாரணத் தரப் பரீட்சையில் மிகவும் திறமையாகச் சித்திப் பெற்றிருந்தாள். மறுநாட் காலை க.பொ.த உயர்தரப் பிரிவில் விஞ்ஞானத் துறையில் படிப்பதற்காக அட்டன் பிரதேசத்தில் இருக்கும் பிரபல பாடசாலைக்குச் செல்லவிருக்கின்றாள். என்பதாலும், பரீட்சையில் எட்டு ஏ. ஒரு பி (8யு-டீ) எடுத்து மிகவும் திறமையாகப் பாஸ் பண்ணியிருப்பதையும் பற்றியுமே இந்த உரையாடல்கள் தொடர்ந்து கொண்டிருந்தன.

பாடசாலையில் நடந்த பாராட்டு விழாவில் பலரும் பலவாறு புகழ்ந்து பேசினார்கள். இந்த நாளை குமாரிக்கு மறக்க முடியாது. இவள் பேசும் போது நான் ஒரு டாக்டராக வருவேன். இதுதான் எனது இலட்சியம். என் பெற்றோர்களின் கனவை நனவாக்குவேன். செல்லும் பாடசாலையில் எனது பாடசாலையின் புகழைக் காப்பாற்றுவேன்.

மறுநாள் காலை அட்டன் பஸ்சில் ஏறி தகப்பன் சுந்தரத்தோடு அட்டனை நோக்கிப் புறப்பட்டார்கள். குமாரிக்கு இப்பிரதேசம் புதுசு, ஆங்காங்கே மலைச் சரிவுகள், இயற்கையான நீர் வீழ்ச்சிகள், வளைந்து நெளிந்து போகும் பாதை, மெல்லிய குளிர் காற்று இதையெல்லாம் பார்க்கும் போது குமாரிக்கு மிகவும் பிடித்து இருநந்து. புதிய பாடசாலை குமாரிக்கு மிகவும் பிடித்திருந்தது. அப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் அனைவரும் இவளுடைய பெறுபேற்றைக் கேட்டு விட்டுப் பாராட்டினார்கள். இவற்றையெல்லாம் கேட்ட போது, நன்றாகப் படிக்க வேண்டும் என மனதில் நினைத்துக் கொண்டாள்.

பாடசாலையை விட்டுச் செல்ல முற்பட்ட தந்தையைக் கட்டிப் பிடித்து அழத் தொடங்கினாள். தந்தையின் பாசம் அவளை வாட்டியது. அந்த பாடசாலையே ஒரு கனம் சோகத்தில் மூழ்கியது. தந்தையின் கண்களும் கலங்கி விட்டது. இல்லம்மா.. நீ, நல்லா படிச்சி பாஸ் பண்ணும். நா ஒன்ன அடிக்கடி வந்து பார்க்கிறேன் என சொல்லிவிட்டு மகளைப் பிரிய மனமில்லாமல் பாடசாலை முடியும் வரை காத்திருந்து மகளை போடிங் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

காலங்கள் ஓடுகின்றன. குமாரி உயர் தரத்தில் முதலாவது வருடத்தைப் பூர்த்தி செய்கின்றாள். பாடசாலையில் நடைபெறுகின்ற விளையாட்டுப் போட்டி, இலக்கிய மன்றங்கள், தமிழ் மொழித் தினம், எல்லா விடயங்களிலும் நல்ல பெயர் எடுக்கின்றாள். பாடசாலையில் மாணவத் தலைவி, உயர்தரப் பிரிவில் சிறந்த மாணவி என பல பரிசுகளையும் பாராட்டுக்களையும் பெறுகின்றாள்.

தினமும் பாடசாலைக்கும் மேலதிக வகுப்புக்களுக்கும் செல்கின்றாள். நன்றாகப் படிக்கின்றாள் என ஆசிரியர்களும், பெற்றோரும் நம்பினர். எப்படியாவது இம்முறை குமாரி நல்ல ரிசலட் எடுத்து பாஸ் பண்ணுவாள் என அனைவரும் நம்பினார்கள். இம்முறை மருத்துவத்துறைக்குச் செல்வாள் என அனைவரும் பேசிக் கொண்டனர். சுந்தரமும் தன் மகள் டாக்டராக வருவாள் நல்லா படிக்கின்றாள் என தோட்டத்தில் உள்ள சக தொழிலாளர்களிடமும் தினமும் சொல்லிப் பெருமைப் பட்டுக் கொள்வான்.

குமாரியோ தன் தோழி சுந்தரியின் சகோதரனோடு எப்படியோ காதல் வசப்பட்டு விட்டாள். தினமும் செல்போனில் பேசுவதும், குறுந்தகவல் அனுப்புவதும், வெளியில போய் வருவதும், பஸ்சில் செல்வதும் என சுதந்திர பறவைகளாய் சுற்றித் திரிந்தாள். தன் காதலனோடு யாருக்கும் தெரியாமல் பழகிக் கொண்டிருந்தாள், தாய் தந்தை பாசம், தனக்கு மாதம் எட்டாயிரத்திற்கு மேல் செலவு செய்யும் பெற்றோர், சகோதரர், உற்றார் உறவினர்கள் எல்லாம் இப்போது மறந்து விட்டு காதலில் மூழ்கி விட்டாள். தன் பெற்றோரைப் பார்க்க வீட்டுக்குச் செல்வதும் குறைந்து விட்டது.

சிறிது சிறிதாகப் படிக்கின்ற ஆர்வமும், தன்மையும், நடையுடை பாவனையும் மாறிவிட்டது. விடயத்தை கேள்விப்பட்டவர்கள், எவ்வளவு புத்தி சொல்லியும் அவள் மசிய வில்லை. காதலன் குமாரை மறக்க முடியாமல் தவித்தாள்;. குமார் பாடசாலை கல்வியை இடையில் விட்டு விட்டு கொழும்புக்கு வேலைக்குச் சென்று விட்டான். இவனுடைய சம்பளத்தை நம்பி ஒரு குடும்பமே இருக்கின்றது. என்ன செய்வது காதல் கண்ணை மறைக்கும் என்பது இவர்களுக்கு மட்டும் புரியுமா?

குமாரிக்கு உயர்தரப் பரீட்சை நெருங்கியது. காதலனைப் பிரிந்து விடுவோமோ என்பதை நினைக்கும் போது வேதனையாக இருந்தது. இதனால் இருவரும் அடிக்கடி சந்தித்துக் கொண்டார்கள். பரீட்சையும் எழுதுகின்றாள்.

நடந்து முடிந்த உயர்தரப் பரிச்சையைச் சிறப்பாக எழுதியதாகவும், தனக்குக் கட்டாயம் நல்ல ரிசல்ட் வரும் என்றும் யுனிவர்சிட்டி கிடைக்கும் என்றும், சொல்லித் திரிந்தாள். நான் டொக்டராக வருவேன். என உறுதியாக நம்பினாள்.

உயர் தரப் பரீட்சைப் பெறுபேறு இணையதளத்தில் வெளியிடப்பட்டது. குமாரி மிகவும் ஆவலோடு தன்னுடைய சுட்டெண்ணைக் கொடுத்து பெறுபேற்றைப் பார்த்தாள். அந்த பெறுபேற்றை அவளால் நம்ப முடியவில்லை. மீண்டும் மீண்டும் பார்க்கச் சொன்னாள். தன்னுடைய சுட்டெண்ணை பல முறை சரிபார்த்தாள். அவளுடைய பெறுபேறானது அனைத்துப் பாடங்களிலும் W.. (WEAK PASS) என காணப்பட்டது.

குமாரியாள் நம்ப முடியவில்லை. தன் இதயமே வெடித்து விடுவதுபோல் இருந்தது. தலைச் சுற்றியது. தன்னுடைய தாய் தந்தையின் கனவுகளெல்லாம் உடைந்து சுக்கு நூறாய் போனதை உணர்ந்தாள். இரண்டு வருட காலமும் செலவு செய்த பணம், நேரம், காலம், அலைச்சல், நம்பிக்கை எல்லாம் ஒரு நொடியில் பொழுதில் வீணாகி விட்டதை உணர்கின்றாள். தாய் தந்தையிடத்தில் எப்படிப் போய் இந்த ரிசல்டைச் சொல்லுவேன். இவர்கள் முகத்தில் எப்படி முழிப்பேன்? என மனதுக்குள் அழுகின்றாள். என் மேல் நம்பிக்கை வைத்திருந்த பெற்றோர்கள், ஆசிரியர்கள், பாடசாலை, நண்பர்கள், சமூகம் இவர்களெல்லாம் கண்முன்னே நிற்கின்றார்கள். குமாரிக்கு அவமானம் தாங்க முடியவில்லை. தன்மேலேயே ஒரு வெறுப்பு ஏற்படுகின்றது. வாழ்க்கையில் ஏதோ பெரிய தவறு செய்துவிட்டதைப் போல் உணர்கின்றாள்.

படிக்கப் போன இடத்தில் காதல் வசப்பட்டு இப்படி வாழ்க்கையைத் தொலைத்து விட்டதை நினைக்கும் போது, இறந்து விட வேண்டும் என, குமாரி நினைத்துக் கொண்டு மிக வேகமாக வீட்டை நோக்கி நடக்கின்றாள்.

இதே சிந்தனையோடு வீட்டுக்குச் செல்லும் குமாரிக்கு வீட்டில் பேரதிர்ச்சி காத்திருந்தது. வீட்டுக்கு முன் தோட்டத்து மக்கள் அனைவரும் கூடி நிற்பதைக் காண்கின்றாள். தன் மகள் அனைத்து பாடங்களிலும் பெயிலாகி விட்டதை கேள்விப்பட்ட சுந்தரம் அவமானம் தாங்க முடியாமல் உரத்தைக் கலக்கிக் குடித்து விட்டார். தோட்டத்து மக்கள் சுந்தரத்தை உடனே பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு போய் விட்டார்கள்.

இதனைக் கேள்விப்பட்ட குமாரி ஐயோ அப்பா… என கத்திக் கொண்டு பெரியாஸ்பத்திரிக்கு ஓடுகின்றாள். அங்கு தன் தந்தையின் நிலையைப் பார்த்த குமாரி கத்தி கதறுகின்றாள். அப்பா நீங்க இல்லாம நா வாழ மாட்டேன். அப்பா என்ன மன்னச்சிடுங்க நா செஞ்ச தவறையெல்லாம் உணர்ந்துட்டேன். நா எப்படியாவது இரண்டாம் முறை படித்து பாஸ்பன்னுவேன் என்ன நம்புங்க… என தந்தையைக் கட்டிப்பிடித்து அழுகின்றாள்.

தாய் சோகத்தில் கணவனின் பக்கத்தில் இருக்கின்றாள்.

ஒரு கிழமையின் பின் தந்தை டிக்கட் வெட்டி(சுகமாகி) வீட்டுக்கு வரும் போது,

தன் மகள் ஒரு இலட்சிய வெறியோடும், வைராக்கியத்தோடும் நான் டாக்டராக வருவேன் என கதவில் எழுதிப் போட்டுப் படித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து நிம்மதியடைகின்றார்.

இந்தியா

# உக்ரைன் போரில் ஈடுபட நிர்பந்திக்கப்படும் தங்களை

## காப்பாற்றுமாறு 7 இந்தியர்கள் கோரிக்கை



ரஷ்யாவுக்கு சுற்றுலா சென்ற தாங்கள் ஏமாற்றப்பட்டு ரஷ்ய இராணுவத்தில் சேர்க்கப்பட்டு, உக்ரைனுக்கு எதிராக போரிட நிர்ப்பந்திக்கப்படுவதாகத் தெரிவித்துள்ள பஞ்சாப் மற்றும் ஹரியானாவைச் சேர்ந்த 7 இளைஞர்கள், தங்களுக்கு உதவுமாறு இந்திய அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குறித்த 7 இளைஞர்களில், ஐந்து பேர் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் மற்ற இருவர் ஹரியானாவைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது.

இந்த இளைஞர்கள் புத்தாண்டை கொண்டாடுவதற்காக கடந்த ஆண்டு டிசம்பர் 27ஆம் திகதி ரஷ்யா சென்றுள்ளனர். அங்கு அவர்கள் ஏமாற்றப்பட்டு ரஷ்ய இராணுவத்தில் உதவியாளர்களாக சேர நிர்பந்திக் கப்பட்டுத்தப்பட்டதாகவும், ரஷ்ய இராணுவத்தில் சேர அவர்களை பொலிஸார் நிர்பந்தித்தாகவும், இல்லையெனில், பத்து வருடம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டி இருக்கும் என கூறியதாகவும் இளைஞர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இதற்கு முன்னர், ரஷ்ய இராணுவத்தில் இராணுவ உதவியாளர்களாக சேர்க்கப்பட்ட மூன்று இந்தியர்கள் உக்ரைன் எல்லைப் பகுதியில் துப்பாக்கி ஏந்தி போரிட நிர்பந்திக்கப்பட்டனர் என்று கடந்த பெப்ரவரி 20ஆம் திகதி இந்து ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டிருந்தது.

மேலும் கடந்த ஒரு வருடத்தில் சுமார் 100 இந்தியர்கள் இதுபோல ரஷ்ய இராணுவத்தால் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





# உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் ஜெ:ப் பிசோஸ் முதலிடம்

உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் அமேசான் நிறுவனர் ஜெஃப் பிசோஸ் முதலிடம் பிடித்தார். டெஸ்லா நிறுவனர் எலான் மஸ்க் தொடர்ந்து முதலிடம் வகித்து வந்த நிலையில், இப்போது அவரைப் பின்னுக்குத் தள்ளி ஜெஃப் பிசோஸ் முதலிடம் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ப்ளூம்பெர்க் நிறுவனத்தின் தற்போதைய மதிப்பீட்டின்படி, எலான் மஸ்கின் நிகர சொத்து மதிப்பு 198 பில்லியன் டொலராக குறைந்துள்ள நிலையில் ஜெஃப் பிசோஸின் சொத்து மதிப்பு 200 பில்லியன் டொலராக உயர்ந்துள்ளது.

முன்பு, எலான் மஸ்க் உடன் ஒப்பிடுகையில் சொத்து மதிப்பில் ஜெஃப் பிசோஸ் மிகவும் பின்தங்கி இருந்தார். 2022ஆம் ஆண்டுக்குப் பிறகு அமேசான் பங்கு மதிப்பு இருமடங்கு உயர்ந்தது. அதேசமயம், 2021-க்குப் பிறகு எலான் மஸ்கின் சொத்து மதிப்பு 50 சதவீதம் சரிவைக் கண்டது. இதனால், ஜெஃப் பிசோஸின் சொத்து மதிப்பு எலான் மஸ்கை நெருங்கியது. இந்நிலையில், தற்போது எலான் மஸ்கைப் பின்னுக்குத் தள்ளி ஜெஃப் பிசோஸ் முதல் இடம் பிடித்துள்ளார்.



சீனா

# நடிகையைப்போல் மாறும் ஆசை யுவதிக்கு ஏற்படுத்திய பாதிப்பு

சீன நடிகையான எஸ்தர் யூவைப் போல் தனது தோற்றத்தை மாற்றவேண்டும் என்னும் ஆசையில் பெற்றோரின் சம்மதத்துடன் அறுவை சிகிச்சை செய்துகொண்ட பெண்ணுக்கு தற்போது அதுவே பெரும் வினையாகிவிட்டது.

கிழக்கு சீனாவில், ஸேஜியாங் மாகாணத்தைச் சேர்ந்த சூ சூனா (Zhou Chuna) என்னும் பெண், தனது 13 வயதில் இருந்தே 10 கண்ணிமை அறுவை சிகிச்சைகள், பல எலும்பு ஷேவிங் சிகிச்சைகள் என்பனவற்றை செய்துள்ளாராம். 100க்கும் மேற்பட்ட மருத்துவ நடைமுறைகளை தொடர்ந்து வந்துள்ளார்.

வலி மிகுந்த தொடர் அறுவை சிகிச்சைகளை செய்து கொண்ட அவருக்கு, மருத்துவர்கள் அபாய எச்சரிக்கையும் செய்துள்ளனர்.

ஆனாலும் அவர், அவற்றை தொடர்ந்துள்ளார்.

இந்நிலையில், தற்போது 18 வயதாகும் அந்தப்பெண், நடிகை எஸ்தர் யூ போல தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும் என்னும் ஆசையில் பெற்றோரின் சம்மதத்துடன் "பிளாஸ்டிக் சர்ஜரி" செய்துகொண்டுள்ளார்.

இத்தனை சிகிச்சைகளால் அவருக்கு பல பக்கவிளைவுகள் ஏற்பட்டுள்ளதாம். உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் தற்போது பாதிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான மருத்துவச் செலவு மட்டும் ரூ.4.6 கோடி என்று தெரிகிறது. அப்பாவித்தனமாக தொடங்கிய சிறுமியின் செயல் தற்போது பெரும் பாதிப்புகளை அவருக்கு ஏற்படுத்தியுள்ளது. இதனால் சில வாரங்கள் படுத்த படுக்கையாகவும் இருந்துள்ளார்.

# தாய் கண்டித்ததால் மகள் தற்கொலை

சென்னை - மதுரவாயல் பகுதியில் செல்போன் பார்த்துக் கொண்டிருந்த மகளை தாய் கண்டித்ததால், மகள் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மதுரவாயல் அருகே இந்திராகாந்தி தெரு பகுதியைச் சேர்ந்தவரான 17 வயதான ஸ்ருதிலயா என்னும் 12ஆம் வகுப்பு மாணவியே தற்கொலை செய்துகொண்டவர். இவர் செவ்வாய்க்கிழமை (5), வழக்கம்போல இவரது தாய் வேலைக்கு சென்றுவிட்ட நிலையில், தனது தம்பியுடன் வீட்டில் இருந்துள்ளார்.

இரவு தாய் வேலை முடித்து வீட்டிற்கு வந்தபோது மாணவியின் அறை நீண்ட நேரமாக சாத்தியிருந்ததைக் கண்டு சந்தேகமடைந்த தாய், கதவை உடைத்துக் கொண்டு உள்ளே போய் பார்த்தபோது, மாணவி தற்கொலை செய்துகொண்டது தெரியவந்தது.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார், மாணவியின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கீழ்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கைக்கு கடத்த முயன்ற 99 கிலோ போதைப் பொருட்கள் பறிமுதல்

ராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக்குக் கடத்த முயன்ற 108 கோடி ரூபாய் மதிப்பிலான 99 கிலோ போதைப்பொருட்களை வருவாய் புலனாய்வுத் துறையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

இலங்கைக்கு போதைப்பொருள் கடத்தப்படுவதாகக் கிடைத்த தகவலின்படி, இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தைத் தாண்டி மன்னார் வளைகுடா பகுதியில் வருவாய் புலனாய்வுத் துறை மற்றும் இந்தியக் கடலோர காவல்படை, கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

அப்போது இலங்கையை நோக்கிச் சென்ற நாட்டுப்படகை அவர்கள் மடக்கி சோதனையிட்டனர். அதில் 5 சாக்குகளில் போதைப் பொருட்கள் இருந்தது தெரியவந்தது.



இதனைக் கைப்பற்றிய அதிகாரிகள், அவர்களை மண்டபத்தில் உள்ள கடலோர காவல்படை அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று விசாரித்துள்ளனர். அதன் அடிப்படையில் அவர்களுக்கு போதைப் பொருள் கொடுத்த பாம்பனை சேர்ந்த நபரையும் அதிகாரிகள் கைது செய்தனர்.

இதன்போது, 5 சாக்குகளில் 99 கிலோ எடை கொண்ட போதைப்பொருள் இருந்துள்ளது. அதன் மதிப்பு 108 கோடி இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட நான்கு பேரிடம் தொடந்து விசாரணை நடைபெற்று வருகிறது.



இந்தியா எதிர் இங்கிலாந்து:

# இன்று தொடங்குகிறது ஐந்தாவது டெஸ்ட்


இந்திய- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்தாவது டெஸ்ட் போட்டியானது தரம்சாலாவில் இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கிறது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இங்கிலாந்து வென்றபோதும், அடுத்த மூன்று போட்டிகளையும் வென்ற இந்தியா தொடரைக் கைப்பற்றியுள்ள நிலையில் இப்போட்டியில் ஆறுதல் வெற்றியை இங்கிலாந்து எதிர்பார்க்கிறது.

இங்கிலாந்து அணியில் கடந்த போட்டியில் விளையாடிய ஒலி றொபின்ஸனை மார்க் வூட் பிரதியிடுகிறார். இந்திய அணியைப் பொறுத்த வரையில் ஆகாஷ் டீப்பை ஜஸ்பிரிட் பும்ரா பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

சம்பியன்ஸ் லீக்:
லேஸியோவை வீழ்த்தி

# காலிறுதியில் பயேர்ண் மியூனிச்



> இரண்டாவது சுற்றுப் போட்டியில் 3–0 என்ற கோல் கணக்கில் வென்று, 3–1 என்ற மொத்த கோல் கணக்கில் காலிறுதிப் போட்டிக்கு முன்னேறியது

ஐரோப்பிய கால்பந்தாட்ட சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச் தகுதி பெற்றுள்ளது.

இத்தாலிய சீரி ஏ கழகமான லேஸியோவின் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது சுற்று இறுதி 16 அணிகளுக்கிடையிலான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் தோற்ற மியூனிச், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் வென்று, 3-1 என்ற மொத்த கோல் கணக்கில் காலிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

மியூனிச் சார்பாக, ஹரி கேன் இரண்டு கோல்களையும், தோமஸ் மல்லர் ஒரு கோலையும் பெற்றனர்.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற ஸ்பானிய லா லிகா கழகமான றியல் சொஸைட்டுடனான முதலாவது சுற்றுப் போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் வென்ற பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைன், அவ்வணியின் மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வென்று காலிறுதிப் போட்டிக்குத் தெரிவானது. பரிஸ் ஸா ஜெர்மைன் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் கிலியான் மப்பே பெற்றதுடன், சொஸைட்ட் சார்பாகப் பெறப்பட்ட கோலை மிகேல் மெரினோ பெற்றிருந்தார்.

பந்துவீச்சாளர்களின் தரவரிசையில்

# நான்காமிடத்துக்கு முன்னேறிய ஜொஷ் ஹேசில்வூட்

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் நான்காமிடத்துக்கு அவுஸ்திரேலியாவின் ஜொஷ் ஹேசில்வூட் முன்னேறியுள்ளார்.

நியூசிலாந்துக்கெதிரான முதலாவது டெஸ்டில் நான்கு விக்கெட்டுகளைக் கைப்பற்றியமையைத் தொடர்ந்தே 5ஆம் இடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி நான்காமிடத்தை யடைந்துள்ளார்.

குறித்த டெஸ்டில் 10 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய அவுஸ்திரேலியாவின் நேதன் லையன், எட்டாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி ஆறாமிடத்தை யடைந்துள்ளார்.

முதல் 10 பந்து வீச்சாளர்கள்:
1.ஜஸ்பிரிட் பும்ரா,
2.இரவிச்சந்திரன் அஷ்வின்,
3.ககிஸோ றபாடா,
4.ஜொஷ் ஹேசில்வூட்,
5.பற் கமின்ஸ்,
6.நேதன் லையன்,
7.இரவீந்திர ஜடேஜா,
8. பிரபாத் ஜெயசூரிய,
9. ஜேம்ஸ் அன்டர்சன்,
10. கைல் ஜேமிஸன்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்கள்:
1.கேன் வில்லியம்சன்,
2.ஜோ றூட், 3.ஸ்டீவ் ஸ்மித்,
4.டரைல் மிற்செல்,
5.பாபர் அஸாம்,
6.உஸ்மான் கவாஜா,
7.திமுத் கருணாரத்ன,
8.விராட் கோலி, 9.ஹரி ப்ரூக்,
10. யஷஸ்வி ஜைஸ்வால்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,
1. இரவீந்திர ஜடேஜா,
2.இரவிச்சந்திரன் அஷ்வின்,
3.ஷகிப் அல் ஹஸன்,
4.ஜோ றூட்,
5.அக்ஸர் பட்டேல்.



அறபா வித்தியாலய பழைய மாணவர் கிரிக்கெட் தொடர்:

# சம்பியனான 2013ஆம் ஆண்டு அணி

அபு அலா

அட்டாளைச்சேனை- அறபா வித்தியாலய பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கிரிக்கெட் தொடரில் 2013ஆம் ஆண்டு அணி சம்பியனானது.

அணிக்கு ஒன்பது பேர் கொண்ட 5 ஓவர்களைக் கொண்ட 21 அணிகள் பங்கேற்ற இந்த மென்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் 2007ஆம் ஆண்டு அணி சம்பியனானது.

சம்பியனான 2013ஆம் ஆண்டு அணிக்கு 75,000 ரூபாய் பணப்பரிசும் சம்பியன் கிண்ணமும், இரண்டாமிடம் பெற்ற 2007ஆம் ஆண்டு அணி 50,000 ரூபாய் பணப்பரிசும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 07 மார்ச் 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.